# வறுமை ஒழிப்பில் ஸகாத்தின் பங்களிப்பு: ஒரு விபரண ஆய்வு

M.N.F. Nishfa [1] , A.M.F. Sharmina [2] & M.S.F. Nisfa [3]

*[1&2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

*[1]nnishfa123@gmail.com, [2]fathimashrmy@gmail.com, [3]amna7201@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*வறுமை இன்றளவும் மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகவும் பரவலான மற்றும் ஆபத்தான பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. பல்துறை வழிகாட்டல்களையும் இஸ்லாம் வறுமையை ஒழிப்பதற்காக வேண்டி அதனுடைய பொருளாதார திட்டங்களை மிக சீரான அமைப்பில் முன்வைத்துள்ளது. அதில் மிக முக்கியமான அம்சமாக காணப்படக்கூடிய ஸகாத் வறுமை ஒழிப்புக்காக வழங்கக்கூடிய பங்களிப்பினை மீளாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில், பண்பு ரீதியிலமைந்த இவ்வாய்வானது முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய வரலாற்றுப் புத்தகங்கள்,முன்னைய ஆய்வுகள், இணையக் கட்டுரைகள்,சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளின் மூலம் கிடைக்கப் பெறக்கூடிய வறுமை மற்றும் ஸகாத் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு அவைகள் ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மனிதன் இறைவன் கூறும் பாதையில் தனது செல்வத்தைச் செலவழிப்பதன் மூலமாக, கஞ்சத்தனம், குறுகிய மனம், கல்நெஞ்சம், இரக்கமின்மை, பேராசை இன்னும் இது போன்ற இழி குணங்களிலிருந்து மனிதன் பாதுகாக்கப்படுவதுடன் தாராளத் தன்மை, பிறருக்கு வழங்கக்கூடிய மனப்பான்மை போன்ற பல்வேறு நல்ல குணங்களை தன்னகத்தே கொண்டு துன்பங்களை நீக்கக் கூடிய வகையில் செயல்படக் கூடடியவனாக மாறுகின்றான். அதன் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றில் ஸகாத் முறைமை இஸ்லாமிய ஆட்சியாளர்களினால் செயல்படுத்தப்பட்டு வந்த விதத்தின் ஊடாக இதனை கண்கூடாக கண்டு கொள்ள முடிகின்றது. அந்த வகையில் வறுமை ஒழிப்புக்காக ஸகாத் வழங்கக்கூடிய பங்களிப்பானது மிகவும் சிறப்பான வகையில் அமையப் பெற்றுள்ளது.*

**திறவுச் சொற்கள்** *: இஸ்லாம், வறுமை, வறுமை ஒழிப்பு, பொருளாதாரம்,ஸகாத்*

---

## *1. ஆய்வு அறிமுகம்*

*வறுமை என்பது ஆதிகால மனிதன் தொட்டே கானப்படக் கூடிய பழைமையான பிரச்சினையாகும். இது ஒவ்வொரு சமூகத்திலும் வரலாற்று நெடுகிலும் பாரிய துன்பங்களை ஏற்படுத்தியிருக்கிறது (Damilola et al.,2015) மனிதன் பொருளாதார ரீதியாக நலிவடைந்து காணப்படும் பட்சத்தில் அதன் பாதிப்பு சமூகத்தையும் சேர்த்தே ஆட்கொண்டு காணப்படும். பொருளாதாரம் எனும் போது அதில் வறுமை மிக செல்வாக்கு செலுத்தும் காரணியாக காணப்படுகின்றது. இன்றைய காலவோட்டத்தில் ஒவ்வொரு சராசரி மனிதனும் வறுமையின்*

கோரப்பிடியில் சிக்கித் தவிப்பதனை புள்ளிவிபரங்கள் சான்று பகர்கின்றன. வறுமையின் கோரப்பிடி வளர்முக நாடுகளைக் கூட விட்டுவைக்கவில்லை.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் வறுமையானது சர்வதேச சமூகத்தின் மையப் பிரச்சினையாக உருமாறி, இன்றளவும் மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகவும் பரவலான மற்றும் ஆபத்தான பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது (Damilola et al.,2015) பொருளாதார நிபுணர்கள், துறை சார் வல்லுநர்கள், கலாநிதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என்று ஒரு நாட்டின் பிரதான துறை சார் நிபுணர்கள் ஒன்று சேர்ந்தும் இதற்கு தீர்வு காண்பதில் தோல்வியடைவதனைப் பார்க்கின்றோம் (எம்.றிஸ்கான், 2017). இதற்கென பல்வேறு மாநாடுகள், அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் என பல நூறு முயற்சிகள், செயற்றிட்டங்கள் நாளாந்தம் முன்வைக்கப்பட்ட போதிலும் இவை அனைத்தும் அதன் குறித்த இலக்கை அடைவதில் சாதனை படைக்கவில்லை என்பதே அவற்றின் முடிவாக காணப்படுகின்றது (றிஸ்கான், 2017; பஷர் et al.,2013).

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் ,மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் ஓர் ஆன்மீகப் பரிமாணத்தை வழங்கி மனிதனின் முழு வாழ்வையும் ஒரு வணக்கமாக மாற்றும் சிறப்பம்சம் அமையப்பெற்ற ஒரு மார்க்கமாக அது விளங்குகின்றது . மனிதனின் தனிப்பட்ட வாழ்வு, குடும்பம், பொருளாதாரம், அரசியல், சமூக உறவுகள், கலை - இலக்கிய முயற்சிகள் அனைத்தைப் பொறுத்தளவிலும் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் போதனைகள் , வரையறைகள், பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் ஒரு கட்டுக்கோப்பை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது (பஷர் et al.,2013). இதனூடாக பல்துறை வழிகாட்டல்களையும் வழங்கி மனித வாழ்வின் நலனை பேணும் அமைப்பில் அதன் வழிபாடுகளும் அமையப் பெற்றுள்ளன.

இஸ்லாமானது ஐந்து தூண்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட மார்க்கமாகும்.அதில் மூன்றாவது ஸகாத்தாகும் (ஹம்ரமி, 2021; அலீ, 2015; இஸ்மாயில், 2009) மனிதன் தன் உடலால் அல்லாஹ்வை வணங்குவது போல் தான் சம்பாதித்த செல்வத்தால் அல்லாஹ்வை வணங்க வேண்டும் . ஆகவே , செல்வத்தில் ஒரு பகுதியை அல்லாஹ் கூறிய மக்களுக்கு கொடுப்பது கொண்டு அந்த வணக்கத்தை நிறைவேற்ற வேண்டும் (அலீ, 2015). ஸகாத் என்பது இஸ்லாமிய பொருளாதாரக் கட்டுக்கோப்பில் மிக முக்கிய அங்கமாகும். அது வணக்கம் சார்ந்த இஸ்லாமியக் கடமைகளுள் ஒன்றாகவும் அதே நேரத்தில், ஒரு பொருளாதார நிறுவனமாகவும் காணப்படுகின்றது (பஷர் et al.,2013).

இதன் மூலம் , கஞ்சத்தனம் , குறுகிய மனம் , கல்நெஞ்சம் . இரக்கமின்மை , பேராசை இன்னும் இது போன்ற இழி குணங்களிலிருந்து மனிதன் பாதுகாக்கப்படுவதொடு அன்பு , இரக்கம் , ஈகை , உலக பற்றற்றத் தன்மை போன்ற நல்ல குனங்களை மனிதன் அடையப் பெறுகிறான் (அலீ, 2015). இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் ஒன்றான ஸகாத்தை புனித திருமறையில் அல்லாஹ் தனியாக முப்பது இடங்களிலும் தொழுகையோடு இணைத்து இருபத்தேழு இடங்களிலும் பகிரங்கமாகக் கூறி, அதன் அவசியத்தை அடியார்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளான்.ஆக ,ஒரு முஸ்லிமாக நாம் தொழுகையை நிறைவேற்றுவது போல் ஸகாத்தையும் சரிவர செலுத்துவதன் மூலம் நமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும், இதன் மூலம் அல்லாஹ்வினிடத்திலும் உலகளாவிய சமுதாயத்தின் மத்தியிலும் நாம் முழுமையான ஈமானுடையவராக மாற முடியும் (Sahaluddin & Mokhtar, 2019).

*“இன்னும் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்தும் ஸகாத் கொடுத்தும் வாருங்கள் ஏனெனில் உங்களுக்காக எந்த நன்மையை முன்னமேயே அனுப்பி வைக்கின்றீர்களோ, அதை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் உற்று நோக்கியவனாகவே இருக்கிறான்."(2:110)*

*ஸகாத்தைப் பொறுத்தமட்டில் மனிதன் இறைவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமையாகவும் சகமனிதர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமையாகவும் உள்ளது . இன்னும் இஸ்லாம் செல்வம் தேங்கிக்கிடப்பதை அனுமதிக்கவில்லை.செல்வச் சுழற்சி ஏற்பட்டால் தான் சமூகத்தில் பலதரப்பட்ட பிரிவினரும் பலன் பெறமுடியும் (பஷர் et al,2013) என்பதை இஸ்லாம் போதிக்கின்றது .இதனால்தான்,ஸகாத் கடமையை நிறைவேற்றத் தவறியவர்களுக்கு மறுமையில் வேதனைமிகு தண்டனை வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.*

*(Sahaluddin & Mokhtar, 2019) இஸ்லாம் நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வில் மூழ்கி மனிதன் மறுவுலக வாழ்க்கையை மறந்துவிடுவது குறித்து எச்சரிப்பதோடு , இவ்வுலக வாழ்விலும் நடுநிலையைக் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது. மேலும்,பரந்து விரிந்த இப்பூமியையே ஒரு வணக்கஸ்தலமாகவும , மனித வாழ்வு முழுவதையும் வணக்கமாகவும் மாற்றும் உயரிய பண்பினையே இஸ்லாம் வழிகாட்டுகின்றது(பஷர் **et al**,2013).*

*மாறாக, உலக வளங்களை தாமே துய்க்க வேண்டும் என்ற பேராசையே மனித சமூகத்திற்கு மிகப்பெரும் அழிவை ஏற்படுத்துகின்றதோடு (பஷர் **et al**,2013) வறுமை போன்ற சவால்களையும் சந்திக்க செய்கிறது . இதற்காக இஸ்லாம் வசதி படைத்த , ஸகாத் வழங்க தகுதி உடைய ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் தமது செல்வத்திலிருந்து ஏழைகளுக்குரிய பங்கைப் பகிர்ந்தளிப்பதை கடமையாக்கியுள்ளது.*

*“இன்னும்,அவர்களுடைய செல்வங்களில் கேட்போருக்கும், கேட்காதோருக்கும் உரிமையுண்டு."(51:19)*
*“உனது பொருளுக்கான ஸகாத்தை நீ வழங்கி விட்டால், உன் மீதுள்ள கடமையை நிறைவேற்றி விட்டாய்."(ஸுனன் திர்மிதி)*

*அல்லாஹ் வகுத்த “ஸகாத்” எனும் திட்டம் உரிய முறையில் செயல்படுத்தப்படும் போது வறுமை ஒழிவது மட்டுமின்றி, மனித சமுதாயம் மன நிம்மதியோடு வாழும் சூழலும் உருவாகின்றது (பஷர் et al,2013).இது சமூகப் பாதுகாப்பு அமைப்பை மென்மேலும் வலுப்படுத்த தொண்டாற்றுவதுடன், இஸ்லாமியப் பொருளாதார அமைப்பைச் சரியாகவும், சுமூகமாகவும், மிகச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான முதல் படியாகவும் அமைகின்றது (Sahaluddin & Mokhtar, 2019).*

*அந்தவகையில் இவ்வாய்வானது வறுமை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்க முயல்வதுடன் வறுமையை ஒழிப்பதில் ஸகாத்தின் வகிபாகத்தையும் மீளாய்வு செய்ய முயற்சிக்கின்றது.*

## *2. ஆய்வின் நோக்கம்*

*1. வறுமை தொடர்பாக இஸ்லாம் கூறும் கருத்தாக்கங்களை அதன் வழியில் கண்டறிந்து நிறுவல்.*
*2. வறுமையை ஒழிப்பதில் ஸகாத் எங்கனம் துணைபுரிகின்றது என்பதனைக் கண்டறிந்து அதனை செம்மைப்படுத்தவல்ல விதந்துரைகளை முன்வைத்தல்.*


ISBN: 978-624-5736-55-3

### *3. ஆய்வு முறைமை*

*பண்பு ரீதியிலமைந்த இவ்வாய்வானது முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய வரலாற்றுப் புத்தகங்கள்,முன்னைய ஆய்வுகள், இணையக் கட்டுரைகள்,சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளின் மூலம் கிடைக்கப் பெறக்கூடிய வறுமை மற்றும் ஸகாத் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

### *4. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்*

#### *1.வறுமை பற்றிய பொதுவான கண்ணோட்டம்.*

*பல தசாப்தங்களாக இன்றும் உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வருகின்ற முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக வறுமை அமையப்பெற்றுள்ளது.உலகில் சமத்துவமின்மையின் உந்து சக்திகளில் ஒன்றாகவும் தனிமனித மற்றும் சமூக அபிவிருத்திக்கான முட்டுக்கட்டையாகவும் இது காணப்படுகின்றது (World bank, 2002) வறுமை எனும் போது, அது மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களின் தொகுப்பாக காணப்படுகின்றது.நிதிச்சொத்துக்களின் பற்றாக்குறை, ஏனைய சொத்துக்களைப் பெற வழி இல்லாமை,வாழும் சமூகத்தில் உரிமை மறுக்கப்படுதல் போன்றன அவற்றில் சிலவாகும் (சௌந்தரலிங்கம், 2019).எனவே, தமது நுகர்வு மட்டம் அல்லது வருமான மட்டம், வீடமைப்பு,சுகாதாரம் ,கல்வி வசதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சில உரிமைகளை அனுபவித்தல் என்பவற்றில் மிகவும் கீழ்மட்டத்தில் காணப்படும் ஒரு நிலையே வறுமை எனப்படுகிறது (Department of Census and Statistics Sri Lanka).*

*வறுமையினை விபரிப்பதற்கு ஒரு தனியான அணுகுமுறையோ அல்லது இதனை அளவிடுவதற்கென்று தனியான குறியீடோ இல்லை.இது பல்பரிமாணத்துடனான ஒரு சிக்கலான தோற்றப்பாடாகும்(கிருஷ்ணராஜ், 2016; சகீலா ரூடினுகா, 2013) என விளக்கம் கூறினாலும் ஒரு சில ஆய்வாளர்கள் வறுமையினை வரையறுப்பதற்கும் அளவிடுவதற்கும் மற்றும் கண்கானிப்பதற்கும் நான்கு பிரதான அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்.அவையாவன, நிதி அணுகுமுறை,திறன் அணுகுமுறை,விலகல் அணுகுமுறை மற்றும் பங்குபற்றல் அணுகுமுறை என்பனவாகும் (கிருஷ்ணராஜ்,2016).இதனுடன் ஒருமித்ததாக, வறுமையை அளவிடும் குறிகாட்டிகளாக ஆள்வீதச் சுட்டெண், வறுமை இடைவெளிச் சுட்டெண், வறியவர்களிடையேயான வருமானப் பரம்பல், திரண்ட வறுமைச் சுட்டெண்கள் போன்றனவும் காணப்படுகின்றன (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2021). உலகளாவிய ரீதியில் வறுமையானது நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றது.இருந்தும் ஆசிய,ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற சில குறிப்பிட்ட பிராந்திய நாடுகள் வறுமையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன .இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் வேலையின்மை, மூலதன உருவாக்கம் போதியளவு காணப்படாமை, குறைந்தளவான உள்நாட்டு சேமிப்பு, அடிக்கடி மாறுபடும் அரசாங்கக் கொள்கைகள், உட்கட்டுமான வசதிகள் போதாமை, கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தும் வகையில் போதியளவு திட்டங்கள் செயல்படுத்தப்படாமை,சமூக ரீதியாக புறந்தள்ளப்படுதல் போன்ற அம்சங்களே வறுமைக்குரிய மூலகாரணங்களாகும் (சிவகௌரி ரூஜெயப்பிரபா, 2021).*

*குறைவிருத்தி நாடுகளின் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் அந்தந்த நாட்டு அரசாங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து, வறுமைக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிந்து செயற்றிறன் வாய்ந்த கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வடிவமைக்கின்றன (ஆ.சௌந்தரலிங்கம்,2019). இதனை ஒழிக்க சர்வதேச ரீதியில் பல முன்னெடுப்புக்கள் நிகழ்த்தப்பட்ட வண்ணமே உள்ளன.*

***2. வறுமை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம்.***

*மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டும் வரைகோலாக இஸ்லாம் மார்க்கம் காணப்படுகின்றது. ஒரு மனிதன் இஸ்லாத்தை விட்டும் தூரமாகும் போது அவனது வீழ்ச்சிக்கான காரணிகள் அவனை சூழத் தொடங்கி விடுகின்றன.அவற்றுள் ஒன்றாகவே வறுமை காணப்படுகின்றது.வறுமை மனிதனது வாழ்வை தடம் புரட்டி விடக் கூடியதாக காணப்படுகிறது.இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் வறுமையின் கொடுமையிலிருந்து பாதுகாப்புத் தேடி வந்தார்கள் (வசந்தம், 2008).*

***"**இறைவா! வறுமையிலிருந்தும் இறை மறுப்பிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு கோருகிறேன்"**;** **(**நஸயீ). ஆரம்ப கால அரேபியாவில் வறுமை பரவலாக இருந்ததோடு பெரும்பான்மையான மக்கள் வாழ்வாதார மட்டத்தில் கீழ் நிலையிலே காணப்பட்டனர்.பொதுவாக அங்கு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் காணப்பட்டன **(**Bashir, 2018). நபி(ஸல்)அவர்களின் வருகைக்குப் பின்னர் அல்குர்ஆன் படிப்படியாக அருளப்பெறத் தொடங்கியதுடன் அது மக்களை செழுமையின் பால் இட்டுச் சென்றது.*

*முஸ்லிம்கள் மக்காவில் ஒரு சிறு தொகையினராகவும் ,சமூக அநீதிக்கு ஆளானவர்களாகவும், தமக்கென ஸ்திரமானதொரு அரசியல் நிலைப்பாட்டைப் பெறாதவர்களாகவும் இருந்த வேளையிற் கூட அங்கே இறக்கப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் வறியோரின் வாழ்க்கை மேம்பாட்டில் அக்கறை காட்டுவனவாக அமைந்திருந்தன. ஏழைகளுக்கு உணவளித்தல், அதன்பால் தூண்டுதல் . அல்லாஹ் வழங்கியவற்றிலிருந்து செலவு செய்தல், கேட்போருக்குக் கொடுத்தல் போன்ற மக்கீ வசனப் பிரயோகங்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.*

*"ஏழைகளுக்கு உணவளிக்காதவனும், உணவளிக்கத் தூண்டாதவனும் மறுமையைப் பொய்ப்படுத்தியவர்கள் அவர்கள் நரகில் புகக்கூடியவர்கள்" என அல்குர்ஆனின் மக்கீ வசனங்கள் எச்சரித்தன . அவ்வாறான அல்குர்ஆன் வசனங்களுக்கு உதாரணங்களாக 69:25 – 34**;** 89 : 17 - 18 **;** 107 : 1 - 7 போன்றவற்றை குறிப்பிட்டுக் காட்டலாம்.மேலும், செல்வந்தர்களின் செல்வங்களில் வறியோருக்கும் பங்குண்டு எனவும் மக்கீ வசனங்கள் சில பகிரங்கப்படுத்தின." அவர்களின் பொருள்களில் ( பிறருக்கு ) நிர்ணயிக்கப்பட்ட பங்கு உண்டு. யாசிப்போருக்கும் வறியோருக்கும் ( அவற்றில் பங்குண்டு )" **(** 70 : 24-25 **)** **(**பஷர் et al,2013).*

*இதில்,அல்குர்ஆன் விரிவுரையாளர்களுள் சிலர் "நிர்ணயிக்கப்பட்ட பங்கு" என்பது ஸகாத்தைக் குறிக்கும் என்பர். இது அவர்கள் மீது அல்லாஹ் கடமையாக்கிய ஸகாத் அன்று மாறாக அவர்களே தமது பொருட்களில் இருந்து ஒதுக்கியவையாகும். ஏனெனில், மக்காவில் ஸகாத் கடமையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அல்குர்ஆனின் மக்கீ வசனங்கள் நெருங்கிய உறவினர், ஏழைகள், வழிப்போக்கர் போன்றோருக்கு வழங்குமாறும், வீண்விரயம் செய்ய*

*வேண்டாம் என்றும் போதித்து , சமூகத்தில் குறிப்பிட்ட வேறு சிலரின் வாழ்க்கைத் துன்பங்களை நீக்குவதிலும் அக்கறை காட்டுமாறு ஏவியுள்ளன. அத்துடன் தானியம், கனிவர்க்கங்கள் போன்றவற்றின் அறுவடைகளில் இருந்தும் ஒரு குறித்த பங்கை அதற்குரிய வறியோருக்கு வழங்குமாறும் மக்கீ வசனங்களில் கூறப்பட்டுள்ளது (மேலது).*

*உண்மையில், ஏழைகளுக்கு உணவளிப்பது மிகவும் போற்றத்தகு அம்சமாகும். மனித வாழ்க்கையை மேன்மையடையச் செய்வது, அனைத்து மனிதர்களின் உயிர்களையும் பாதுகாப்பதற்குச் சமனாகும்.*

*இதனாலேயே, ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு உதவவும் வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் வடிவமைக்கப்பட்ட தொண்டுசார் திட்டங்களை இஸ்லாம் போற்றுகின்றது. இதனாலேயே, அல்குர்ஆன் பசித்தவர்களுக்கு உணவளிப்பதையும் ஏழைகளுக்கும்,குறிப்பாக உறவினர்களுக்கு ஆதரவளிப்பதையும் மேன்மைப்படுத்துகிறது (Bashir,2018).*

*"இன்னும், உறவினருக்கு அவருடைய உரிமை (பாத்தியதை)களைக் கொடுப்பீராக மேலும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும், (அவரவர்களுக்கு உரியதைக் கொடுத்து விடுவீராக!) வீணாகப் (பொருளை) விரையஞ் செய்யாதீர்."(17:26).*

*இவை அனைத்துமே வறுமை ஒழிப்பிற்காக ஸகாத்தை ஊக்குவித்து இஸ்லாம் எத்தகைய பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதனை கண்டறியக்கூடிய சான்றுகளாகவே காணப்படுகின்றன. அத்தோடு அது முஸ்லிம் சமூகத்தினர் மீதும் காணப்படக்கூடிய பொறுப்பாகவும் கடமையாகவும் அமையப்பெற்றுள்ளது.*

*எனவே, இங்கு ஏழைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது முஸ்லிம் சமுதாயத்தின் கூட்டுக் கடமையாக ஆகிவிடுகின்றது (Salleh,2017).இந்த நிலையில் ,வறுமையைப் போக்க ஒரு சமூகம் மத ரீதியாக தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் போது (Salleh,2008) , வறுமையின் பாதிப்புகளிலிருந்து மீண்டு நிம்மதியான வாழ்க்கையை கொண்டு செல்லதற்கான வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ள முடியுமாக அமைகின்றது.*

### *3. வறுமை ஒழிப்பில் ஸகாத்தின் பங்களிப்பு*

*இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டும் ஒரு உன்னத மார்க்கமாகும். அது மனித வாழ்வில் ஏற்றத் தாழ்வின்றிய சமநிலைத் தன்மையையே விரும்புகின்றது.அவ்வாறான சமநிலையற்ற போக்கினை ஏற்படுத்தக் கூடிய ஒரு பிரச்சினையாக வறுமை காணப்படுகின்றது. இஸ்லாம் இதனை நிவர்த்தி செய்வதில் மிகப் பெரிய வெற்றியை கைக்கொண்டுள்ளது. இறைவன் கடமையாக்கிய ஸகாத் என்ற பொருளாதார முறைமை சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டு அதன் மூலம் வறுமை ஒழிக்கப்பட்டததற்கான வரலாற்று சான்றுகளை இஸ்லாம் கொண்டுள்ளது. அந்தவகையில் வறுமையை நீக்கி பொருளாதார சமநிலையை ஏற்படுத்துவதில் இஸ்லாம் கூடுதலான கவனம் செலுத்துகிறது என்பது தெளிவாகிறது.ஒரு சமூகத்தின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி ஆகியன அச்சமூகத்தின் பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது.இதனை நிவர்த்தி செய்வதற்காக இஸ்லாம் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஸகாத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது (Shimaya et al, 2017).*


ISBN: 978-624-5736-55-3

*ஸகாத் சமூகத்தின் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு ஏழைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது (றாபிததுன் நழீமிய்யீன், 1998).வறுமையை எதிர்கொள்வதற்கான பல பயிற்சிகளை ,முயற்சிகளை இம்மை-மறுமை இலாப நோக்கம் கருதி இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ளது.இதன்படி வசதி படைத்தவர்கள் வறியவர்களுக்கு வழங்குவதன் மூலம் எந்த மதமும், எந்த உலக மாநாடுகளும் தராத வறுமை ஒழிப்புத் தீர்வை இஸ்லாம் பிரகடனப்படுத்துகின்றது (வசந்தம், 2008).*

*ஸகாத்தானது வறுமையை சமூக வாழ்விலிருந்து விரட்டி பொருளாதார சமநிலையை ஏற்படுத்துவதில் கூடுதலான கவனம் செலுத்துகின்றது.இதன் மூலம் பொருளாதார ரீதியில் சமூகத்தை மேம்படுத்த உதவுகின்ற ஒரு பொருளாதார ஒழுங்காகவும் செயற்படுகின்றது (Shimaya et al,2017).*

*உளப்பரிசுத்தத்தோடு நிறைவேற்றப்படும் ஸகாத்,தனிமனித, சமூக வாழ்வில் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. ஸகாத் அதைக் கொடுப்பவரை அழிவில் இருந்து பாதுகாத்து உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்றதோடு சடப்பொருள்களுக்கு அடிமையாவதிலிருந்தும் விசுவாசியை பாதுகாக்கின்றது (றாபிததுன் நழீமிய்யீன், 1998). சமூகத்தினரிடையே வறுமையை இல்லாதொழித்து ஏழை, தனவந்தவர்களின் உள்ளும் புறமும் தூய்மைப்படுத்தி அல்லாஹ்வின் பக்கம் மீளச் செய்கின்றது. இதனை பற்றி அல்குர்ஆன் கூறும் போது பின்வருமாறு கூறுகின்றது.*

*"நபியே அவர்களின் செல்வங்களிலிருந்து ஸகாத்தை எடுத்து அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மைப்படுத்துவீராக" (09:103).*

*இன்னும், ஸகாத் வழங்குவதன் மூலம், செல்வமானது ஒருவரின் கையில் மாத்திரம் தடைப்படாமல் சுழற்சி முறைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதனால் கொடுப்பவரின் செல்வம் பன்மடங்கு விருத்தியடைந்து அல்லாஹ்வால் (தஸ்கியா) தூய்மைப்படுத்தப்படுகின்றது. மற்றும், சமூக உத்தரவாத்தின் ஒரு பகுதியாக ஸகாத் காணப்படுகிறது. ஒரு வருடத்தில் ஸகாத்தைச் செலுத்திய பலர், சிலபோது அடுத்த ஆண்டில் ஸகாத் பெறத் தகுதியுள்ளவராக மாறிவிடலாம். பொருளாதார வீழ்ச்சி, தேவைப் பெருக்கம், கடன் சுமை, தாயகம், செல்வம் இரண்டை விட்டும் துண்டிக்கப்பட்ட நிலை போன்றவற்றால் இவ்வாறு நிகழ முடியும். அப்போது அவர்களின் ஸகாத் சமூகக் காப்புறுதியாக அமையும். அவர்கள் தமது அடிப்படைத் தேவைகளுக்காக ஸகாத்தைப் பெற தகுதியுடையோராக மாறிவிடுவர். மற்றொரு கண்ணோட்டத்தில் ஸகாத் விதியாகாத, அதற்கு எத்தகு பங்களிப்பையும் செலுத்தாத, அதைப் பெறத் தகுதியுள்ளோருக்கு ஸகாத் சமூக உத்தரவாதமாக அமைகின்றது(றாபிததுன் நழீமிய்யீன், 1998).*

*எனவே, இறைச்சட்டத்தின்படி பணச் செல்வங்கள் பணக்காரக் கரங்களிலிருந்து எடுக்கப்பட்டு வறியோர்களுக்கும் தேவையுடையோர்க்கும் விநியோகிக்கப்பட்டு வறுமையை இல்லாதொழிக்கின்றது (வசந்தம், 2008).இதனால், ஸகாத் தனிமனிதர்களுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்திச் சமூக ரீதியில் உள்ள விரிசலை சமப்படுத்துகின்றது.*

*ஸகாத்தின் முக்கிய நோக்கம் ஏழைகளின் துன்பத்தை தற்காலிகமாகப் போக்குவது மட்டுமல்லாமல், ஏழை எளிய மக்களை, ஏழைகள் அல்லாதவர்களாக மாற்ற உதவும் நிலையான வாழ்வாதாரத்தை வழங்குவதாகும்.வறுமையின் பேரழிவை எதிர்க்கும் தன்மையை உருவாக்க*

வேண்டியதன் அவசியத்தில் குறிப்பிட்ட கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், குடிமக்களை வறுமையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத் தவறினால் அவர்களது வறுமை அடுத்த தலைமுறையினருக்கும் கடத்தப்படும். இதனால் வறுமையின் சுழற்சி தொடரும் (*Esawe et al, 2018).*

ஸகாத் குறிப்பாக, எட்டு கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என அல்லாஹ் அல்குர்ஆனில் பணிக்கிறான்.

*"ஸகாத் எனும் தானங்கள் பக்கீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் அதன் உத்தியோகத்தகர்களுக்கும் இஸ்லாத்தின் பால் இணக்கமானோருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் கடன்பட்டவர்களுக்கும் அல்லாஹ்வின்பால் போராடுபவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உரித்தான அல்லாஹ் விதியாக்கிய கடமையாகும். அல்லாஹ் மிக அறிந்தோனும் ஞானமுடையோனுமாவான்." (09:60).* இதிலும் பக்கீர்களையும் மிஸ்கீன்களையும் முதன்மைப்படுத்தி அவர்களது வறுமையை போக்க வழிவகைகளை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. எனவே,ஸகாத்தானது வறுமையை ஒழிப்பதையே உயரிய எண்ணக்கருவாகக் கொண்டு தொழிற்படுகின்றது என்பதை இது காட்டுகிறது.

வரலாற்று ரீதியாக மக்காவில் ஆரம்பகால முஸ்லிம் சமூகத்தில் இருந்தே ஸகாத் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது *(Farah et al, 2012)*. குலபாஉர் ராஷிதீன்கள் காலத்தில் குறிப்பாக,அபூபக்கர்(றழி) அவர்கள் ஸகாத் என்னும் ஏழை வரியைச் செல்வந்தர்களிடம் கட்டாயமாக வசூலித்து பொது நிதியில் சேர்த்து மக்களுக்கு வழங்கியதன் மூலம் மக்களின் கஷ்டத்தை நீக்குவதற்கு கலீபா அவர்கள் வழிகாட்டினார்கள் (அபுல் அமீன், *2016).* உமர் பின் அல் கத்தாப் (றழி) இன் ஆட்சியில், ஸகாத் வசூல் செய்யும் "அல் ஆஷிர்" புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.இவர் நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தார். ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் ஒரு வரி வசூலிப்பாளர் நியமிக்கப்பட்டு, பிற நாடுகளிலிருந்து வரும் முஸ்லிம் வர்த்தகர்களிடமிருந்து ஸகாத் *(Farah et al, 2012)* உமையாக் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் காலத்தில் ஸகாத் பெற எவருமே காணப்படாத அளவிற்கு துல்லியமாக மக்களிடையே ஸகாத் நடைமுறைப்படுத்தப்பட்டது.சமநிலைப் பொருளாதாரம் அவரது ஆட்சி எங்கும் பரவியது. இவை அனைத்துமே வறுமை ஒழிப்பிற்காக ஸகாத் வழங்கிய பங்களிப்புகளுக்கான வரலாற்று ரீதியான ஆதாரமாக காணப்படுகின்றன.

பல தசாப்தங்களாக உலகின் அனைத்து நாடுகளிலும் பாரிய பிரச்சினையாக வருமான சமத்துவமின்மை காணப்படுகின்றது. வருமான சமத்துவமின்மை என்பது குறித்த ஒரு நாட்டில் எல்லா நபர்களுக்கும் குறித்த சமவிகிதத்தில் வருமானம் பகிரப்படாத நிலையாகும் (அகமட் லெப்பே *& Fazeela, 2014).*

அந்த வகையில், ஒரு நாட்டில் பொருளாதார நெருக்கடி, வறுமை போன்ற சூழல் நிலவுகிறது என்றால் அந்நாட்டு அரசிடமும், மக்களிடமும் போதிய பணம் இல்லை என்பதே காரணமாகும் (விக்னேஷ் , *2022).*

இலங்கை நாட்டைப் பொருத்தவரையில் தற்போது நிலவும் அசாதாரணப் பொருளாதார நெருக்கடி காரணமாக அனுதினமும் மக்கள் தங்களது அன்றாட தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் அவதியுறுகின்றனர். அரச ஊழியர்கள் வருமானமின்றிய

*உழைப்பிலே ஈடுபடுகின்றனர். நாளுக்கு நாள் அதிகரிக்கும் விலைவாசியை ஈடுகட்ட முடியாத மக்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்து காணப்படுகின்றனர். இந்நிலையில் காணப்படும் மக்களுக்கு இஸ்லாம் கூறும் ஸகாத்தை பகிர்ந்தளிப்பதன் மூலம் அவர்களது பொருளாதாரம் மேம்பட்டு,வாழ்வாதாரம் செழிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.*

*"அவர்களது பொருள்களில் (பிறருக்கு) நிர்ணயிக்கப்பட்ட பங்கு உண்டு. யாசிப்போருக்கும் வறியோருக்கும் (அவர்களின் பொருட்களில் பங்குண்டு)." (அல்குர்ஆன் : 70:24,25)*

*ஸகாத்தானது ஏழை மக்களது அன்றாடத் தேவைகளைப் பரிபூரணப்படுத்தி பொருளாதார மீட்சியை ஏற்படுத்துகின்றது. சமகால நாட்டில் எதிர்கொள்ளும் வறுமை, பஞ்சம், பட்டினிக்குரிய சிறந்த தீர்வாக ஸகாத் காணப்படுகின்றது.*

***5. பரிந்துரைகள்***

*1.ஸகாத் பெறத் தகுதியுடைய கூட்டத்தினரை சரியான முறையில் இனங்கண்டு அவர்களிடைய உரிய முறையில் பகிர்ந்தளிப்பை மேற்கொள்ள வேண்டும்.*

*2.ஸகாத் வழங்குவதினூடாகக் கிடைக்கும் இம்மை- மறுமை தாத்பரியங்களையும் முக்கியத்துவங்களையும் எடுத்தியம்ப வேண்டும்.*

*3.ஸகாத்தை ஒழுங்கான முறையில் திறம்பட விநியோகிப்பதன் ஊடாக வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி பொருளாதார சம நிலையை ஏற்படுத்த முயற்சித்தல்.*

*4.தற்கால சூழலில் நிலவும் பொருளாதார நெருக்கடியை இல்லாதொழிக்கும் முகமாக மக்களிடையே ஸகாத்தின் கடப்பாட்டை நிறுவி அதனை வழங்க ஆர்வமூட்டல்.*

*5.ஸகாத்தை நிறுவனமயப்படுத்தி அது பற்றிய விமர்சனங்களை இல்லாதொழிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளல்.*

*6.ஸகாத் ஒரு கூட்டுக் கடமை என்ற முக்கியத்துவத்தை பற்றிய தெளிவை சமூகத்தினரிடையே ஏற்படுத்தி அதன்பால் மக்களை ஒன்றிணைத்தல் வேண்டும்.*

*7.ஸகாத் உரிய முறையில் நடைமுறைப்படுத்தி உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் வேண்டும்.*

*8.வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களுக்கு ஸகாத்தின் மூலம் கைகொடுத்து உதவல் வேண்டும்.*

*6. **முடிவுரை***

*ஒரு சமூகத்தின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பொருளாதாரமே காரணமாக அமைகின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரம் சீர்பெறுமானால், அந்நாட்டு மக்களே பிரத்தியேக மகிழ்ச்சியைக் கொண்ட குடிகளாகும். ஏக இறைவன் எமக்கு வகுத்த ஸகாத் எனும் உயரிய திட்டமானது, வறுமையின் ஆழஅகலங்களை ஆராய்ந்து அதனை அழகுற நிவர்த்தி செய்யும் செயன்முறையாகக் காணப்படுகின்றது. அந்தடிப்படையில், ஒரு தேசத்தின் வறுமையை இஸ்லாம் வகுத்துக் காட்டிய ஸகாத் முறைமையிலானன்றி நடைமுறைத் திட்டங்களால் வகுக்க முடியவில்லை என்பதே*

*நிதர்சனமான உண்மையாகும். ஸகாத் கட்டுக்கோப்பான முறையில் நாட்டினது வங்கலோத்து நிலையை நிவர்த்தி செய்து மக்களின் பசி,பட்டினி மற்றும் வறுமையை இல்லாதொழிக்கிறது. இதனை தனித்து செயற்படுத்துவதை விட கூட்டாகக் குழுமி நிறைவேற்றுவதனால் அதன் உயரிய பலாபலன்களை அடைந்து கொள்ள முடியும். வறுமையை ஒழிப்பதில் ஸகாத்தானது முக்கிய வகிபங்கமாகக் காணப்படுகின்றது. இதனை திட்டமிட்டு சமூகத்தினிடையே செயற்படுத்துவதன் மூலம் வறுமையை அகற்றி சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பை சீரமைக்க முடியும் என்பது ஆதார பூர்வமான உண்மையாக காணப்படுகின்றது.*

***உசாத்துணைகள்***

Ameen, M. (2014). *Dinamani*. Retrieved 04 13, 2022, from www.dinamani.com: https://www.dinamani.com/weekly-supplements/vellimani/2014/jul/10/%E0%AE% 9C% E0% AE%95%E0 %AE%BE% -%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%BF-934628.html

Ansar, S. (2008, 10). Vasantham. (M. Musavir, Ed.) *Varatchimihu varumayum puratchimihuiIslamiya theervuhalum*, p. 20.

Bashir, A. H. (2018). Reducing Poverty and Income Inequalities:Current Approaches and Islamic Perspective. *JKAU:Islamic Econ, 31*(1), 93-104.

Beik, I. S. (2019). *Interview with World Zakat Forum/BAZNAS.* Indonesia: UNHCR.

Byerlee, D. (1999). Targetting Poverty Alleviation in Priority Setting in National Research Organizations:Theory and Practice. *ResearchGate, 25*(4), 1-22.

Department of Census and Statistics. (2022). *District Official Poverty Line-February 2022.* Deartment of Census and Statistics. Colombo: Department of Census and Statistics.

Ilangai mathiya vangi aandarikkai-2010. (2010). *porulathara mattrum samooha utkattamaippu.* Colombo: Cental Bank of SriLanka.

Shimaya, M.R.F. (2017). Varumai olipil baithuz zakat niruwanathin pangalipu:paragahadeniya piradesathai maiyapaduthiya aaiwu. *E - Repository*, 159-165.

Akram, M.M. A. (2014). Dynamic Role of zakat in Alleviating Poverty:A Case Study of Pakistan. *ResearchGate*, 1-45.

Mulyadi, A. R. (2018). E-Zakat:Redesign the Collection and Distribution of Zakat. *Knowledge E, 2018*, 433-452.

NafiahAriyani. (2016). Zakat as a Sustainable Strategy for Poverty Alleviation:from the Perspective of a Multi-Dimensional Analysis. *International Journal of Zakat, 1*(1), 89-107.

Nazri, F. A., Rashidah, A. R., & Normah, B. O. (n.d.). Zakat and Poverty Alleviation:Roles of Zakat Institutions in Malaysia. *ResearchGate, 1*(7), 61-72.


ISBN: 978-624-5736-55-3

Salafi, M. (2014). *IslamKalvi.com*. Retrieved 04 28, 2022, from www.islamkalvi.com: https://www.islamkalvi.com/?p=3631

Salafi, S. (2009). *IslamKalvi.com*. Retrieved 04 13, 2022, from www.islamkalvi.com: https://www.islamkalvi.com/?p=3631

Salleh, M. S. (2017). Contemporary Vision of Poverty and Islamic Strategy for Poverty Alleviation. *SAGE Journals*, 1-8.

Sara Salim Al-Hadhiri, M. K.H. (2021). Role of Zakat in Poverty Alleviation:A case Study in Nizwa City,Sultanate of Oman. *Proceeding of the 2nd Kedah International Conference 2021* (pp. 221-232). kedah ,Malaysia: KEIZAC2021.

Saudharalingam, A. (2019). coormai. (Ms.G.Kajenthini, Ed.) *Kurai viruthi naaduhalil pengalum varumayum*(1), pp. 1-92.

Wahid Damilola Olanipekum, A. N. (2015). The Role of Zakat as a poverty Alleviation Strategy and a Tool for Sustainable Development:Insights from the Perspective of the Holy Prophet (PBUH). *ResearchGate*, *5*(3), 8-17.


ISBN: 978-624-5736-55-3